


# 09.10.2026 செய்திகள்

## கனடா எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

- கனடா எழுத்தாளரும் கவிஞர் மற்றும் மொழிபெயர்ப்பாளருமான ஆன் கார்சனுக்கு (76) 2026-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- பாரம்பரிய இலக்கிய மரபோடு, ஒரு விளையாட்டுத்தனமான உரையாடலுடன் சமகால இலக்கியத்துக்கு புதிய வடிவங்களை உருவாக்கிய துணிச்சலான மற்றும் புதுமையான படைப்புகளுக்காக அவருக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- புராண கிரேக்க மற்றும் ரோமகால இலக்கியங்களில் இருந்து கருப்பொருள்களையும், கதைகளையும் ஆதாரமாக கொண்டு ஏராளமான கவிதை, கட்டுரை புனைகதைகளை அவர் எழுதியுள்ளார்.
- கார்சன் எழுதிய புத்தகங்களில் 'இரோஸ் தி பிட்டர்ஸ்வீட்', 'ஆட்டோபயோகிராபி ஆஃப் ரெட்', 'மென் இன் தி ஆஃப் ஹவர்ஸ்', 'நார்மா ஜின் பேக்கர் ஆஃப் டிராய்' உள்ளிட்டவை புகழ்பெற்றவை ஆகும்.

SURESH'

## ஜி.எஸ்.டி.

- ரூ.5 கோடி வரை வரி நிலுவைக்கு வழக்கு கிடையாது
- அபராதம், சிறை குறித்து நீதிமன்றம் தான் முடிவு செய்யும்
- பொது அபராதம் ரூ.25,000ல் இருந்து ரூ.15,000 ஆக குறைப்பு
- வரி விகிதங்களில் எந்த மாற்றமும் இல்லை

» முக்கிய அம்சங்கள்

- ஜி.எஸ்.டி. சட்டத்தின் கீழ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கைது செய்யும் அதிகாரம் நீக்கம்
- வழக்கு தொடர்வதற்கான வரித்தொகை வரம்பு 1 கோடி ரூபாயில் இருந்து 5 கோடி ரூபாயாக உயர்வு.
- குறைந்தபட்ச தண்டனை விதி நீக்கம், அபராதம், சிறை தண்டனை (அ) இரண்டும் விதிப்பது நீதிமன்றத்தி ன் முடிவு
- பொது அபராதம் 25,000 ரூபாயில் இருந்து 10,000 ரூபாயாக குறைப்பு

- 10,000 ரூபாய்க்கு குறைவான தொகைக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படாது, ஏற்கனவே நிலுவையில் உள்ள நோட்டீஸ்களும் திரும்ப பெறப்படும்.
- ரிட்டர்ன் தாக்கல் செய்வதில் தாமதம், தவறுகள் (அ) வரிசெலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், வழக்கமான சூழ்நிலைகளில் கூடுதல் தண்டனைகளுக்கு பதிலாக, நிலுவை வரி வசூல், வட்டி மற்றும் சம்பந்தப்பட்ட அளவிலான அபராதம் மட்டுமே விதிக்கப்படும்.

» உள்ளீட்டு வரி வரவு

- ஊழியர்களுக்கான மருத்துவ மற்றும் ஆயுள் காப்பீட்டில் செலுத்தப்படும் ஜி.எஸ்.டி.க்கு உள்ளீட்டு வரி வரவு பெறலாம்.
- தொலைத்தொடர்பு கோபுரங்கள், இலவச மாதிரிகள், சட்டப்படி அழிக்க வேண்டிய காலாவதியான பொருட்களுக்கு உள்ளீட்டு வரி வரவு பெறலாம்.
- குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், வெளிப்புற கேட்டரிங் சேவைகளுக்கும் உள்ளீட்டு வரவு சலுகை விரிவாக்கம்
- முறையான இன்வாய்ஸ் வைத்திருக்கும், பொருட்களை பெற்றுக்கொண்ட, முழுமையான தொகையை செலுத்திய நுகர்வோர், அவர்களது சப்ளையர் வரி செலுத்தாத நிலையிலும், உள்ளீட்டு வரவை வழங்குவது குறித்து 3 மாதங்களில் அதிகாரிகள் குழு ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்.

» பிற சீர்திருத்தங்கள்

- பதிவு செய்யப்படாதவர்களுக்கு மட்டுமே பொருட்களை வழங்கும், 5 கோடி ரூபாய் வரை மொத்த வருவாய் கொண்ட வரி செலுத்துவோருக்கு, காலாண்டுக்கு ஒரு முறை வரி செலுத்தி, ஆண்டுக்கு ஒரு முறை ரிட்டர்ன் தாக்கல் செய்யும் திட்டம் அறிமுகம்.
- சிறிய இ-காமர்ஸ் விற்பனையாளர்களுக்கான நடைமுறைகள் எளிதாக்கப்படுகின்றன. உதாரணம ாக, வேறு மாநிலத்தில் உள்ள இ-காமர்ஸ் நிறுவனத்தின் கிடங்கை முதன்மை தொழில் இடமாக அறிவிப்பதற்கான வசதி.
- ஜி.எஸ்.டி. வழக்குகளுக்கான பொதுவான நடைமுறைகள் உருவாக்கப்படும். இதில் நோட்டீஸ், நோட்டீசுக்கு முந்தைய தகவல், மோசடி குற்றச்சாட்டு, விசாரணை மற்றும் உத்தரவு ஆகியவை அடங்கும்.
- ஒரே வகையான சேவைகளை வாங்கி மீண்டும் விற்கும் சேவைகளுக்கு ஒரு முறை மட்டுமே ஜி.எஸ்.டி. விதிக்கப்படும். உதாரணமாக, முகவர்கள் வாயிலாக முன்பதிவு செய்யப்படும் ஹோட்டல் சேவைகள், உணவகம் மற்றும் கேட்டரிங் சேவைகள், பயணியர் போக்குவரத்து ஆகியவை இதில் வரும்.
- ஜி.எஸ்.டி. விகிதம் தொடர்பான விவகாரங்கள் இனி ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் தனிப்பட்ட கூட்டத்தில் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும்.

SURESH'